நகராட்சி அலுவலகம்
கூடலூர்
நாள்.18.10.2024

# சாதாரண கூட்ட அழைப்பிதழ்

திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ குரோதி வருடம் ஐப்பசி திங்கள் 08-ஆம் நாள் (அக்டோபர் மாதம் 25 ஆம் நாள்.25.10.2024 வெள்ளிக்கிழமையன்று காலை 11.00 மணியளவில் கூடலூர் நகராட்சி நகர்மன்றக்கூட்ட அரங்கில் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் சாதாரணக்கூட்டம் நடைபெறவுள்ளது. அது சமயம் அக்கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(ஓம்/—)லோ.பத்மாவதி
நகர்மன்றத்தலைவர்
கூடலூர் நகராட்சி

**பொருள்.1:**

ஆணையாளர் அவர்களின் ஆகஸ்ட்–2024 மற்றும் செப்டம்பர்– 2024 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது..

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். 1113 /2023/சி1)**

**தீர்மான எண்.726, அ.கு :- பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.2 :**

பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் – 2024 மற்றும் செப்டம்பர் – 2024 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது..

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்

**(ந.க.எண். 1806 /2023/இ1)**

**தீர்மான எண்.727, அ.கு :- பதிவு செய்யப்பட்டது**

**பொருள்.3 :**

கூடலூர் நகராட்சியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு Renovation and Branding Works தலைப்பின் கீழ் பணிகள் மேற்கொள்ள துணை இயக்குநர் ,சுகாதார பணிகள் ,தேனி அவர்களின் கடித ந.க.எண்.5247/ஆர்1/2021 நாள்.07.02.2024 ரூ.3.50 இலட்சம் SNA வங்கி கணக்கு மூலமாக வழங்கபட்டுள்ளது. மேற்படி தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள UHUB கட்டிடத்தின் முன்புறம் செட் அமைத்திட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அனுமதிக்கு வைக்கப்படுகிறது..

<u>அலுவலக குறிப்பு :</u>

1.. மன்றம் அனுமதிக்கலாம்

2. . திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1289/2024/இ1**

**தீர்மான எண்.728, அ.கு :- 1,2 அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள்.4</u> :

அரசு ஆணை(நிலை) எண்: 168 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 16.11.2015 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.25480/ஜே3/2015, நாள்:18.12.2015, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.25480/ஜே3/2015, நாள்:13.06.2016 – இன் படி சீருடை பணியாளர்களுக்கு ஆண்டுதோறும் சீருடைகள் வழங்க உத்திரவிடப்பட்டதின்படி, கூடலூர் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், தூய்மை பணி மேற்பார்வையாளர்கள், வாகன ஓட்டுநர்கள், மின் பணியாளர்கள், குடிநீர் பிரிவு பணியாளர்கள் மற்றும் அலுவலகப் உதவியாளர்களுக்கு 2024- 2025 ஆம் ஆண்டிற்கு சீருடைகள் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்பரேசன்லிட், கோயம்புத்தூரில் வாங்கி கொள்ளவும் மற்றும் தையற்கூலி வழங்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000 க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலகக் குறிப்பு:-</u>

1. நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதியில் அனுமதிக்கப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூல தன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்

**ந.க.எண்.1345/2022/எச்1**

**தீர்மான எண்.729, அ.கு :- 1 –மன்றம் ஏற்க்கப்பட்டது. ,2–தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள்.5</u>:

15வது மத்திய நிதிக்குழு மான்ய வரையறுக்கப்பட்ட (Tied Grant) மற்றும் வரையறுக்கப்படாத நிதி (UnTied Grant) -2023-2024ன் கீழ் கூடலூர் நகராட்சிக்கு குடிநீர் பணிகள் மேற்கொள்ள ரூ.80.50 இலட்சம் மற்றும் மழைநீர் வடிகால் பணி மேற்கொள்ளள ரூ.25.50 இலட்சம் ஆக மொத்தம் இரண்டு பணிகளும் சேர்த்து ரூ.106.000 இலட்சத்திற்கு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.16495/2023/EA-2, நாள்.14.08.2024.ன்படி அனுமதி வழங்கி வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது..

<u>அலுவலக குறிப்பு:-</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண்.575/2024/இ1**

**தீர்மான எண்.730, அ.கு :- பதிவு செய்யப்பட்டது**

**<u>பொருள்.6</u>** :

கூடலூர் நகராட்சியில் அலுவலக உபயோகத்திற்கான நகர்மன்றத்தலைவர், ஆணையாளர், நகராட்சி பொறியாளர் மற்றும் அலுவலக பணியாளர்கள் ஆகியோர்களுக்கு தேவையான நாற்காலிகள், மற்றும் மேஜைகள் ஆகியன வாங்குவதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வருவாய் மற்றும் மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

**ந.க.எண். 1062/2024/இ1)**

**தீர்மான எண்.731, அ.கு :- 1,2 அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள்.7</u>** :

கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பட்டாசுகள் திருமணம், குடும்ப நிகழ்வுகள், இறுதி ஊர்வலம், இதர விழாக்களில் வெடிப்பதால் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக இருந்து வருகிறது, மேலும் அதிக சத்தத்துடன் வெடிக்கும் பட்டாசுகளால் முதியவர்கள் மற்றும் குழந்தைகள் அதிக அளவு பாதிக்கப்படுவதோடு புகை மண்டலம் உருவாகி சுற்றுச்சூழல் மாசு பெருமளவு ஏற்படுகிறது. எனவே தீபாவளி பண்டிகை நாள் மற்றும் அதற்கு முந்தைய நாளை தவிர மற்ற நாட்களில் பட்டாசு பொருட்கள் வெடிக்க கூடாது. கூடலூர் நகரின் எழிலையும், தூய்மையையும் பாதுகாக்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிவுரையின் படி கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 1 முதல் 21 வார்டு வரை உள்ள பகுதிகளில் சுற்றுச்சூழலை அதிக புகை மற்றும் ஒலியை ஏற்படுத்தி மாசுபடுத்தும் பட்டாசு பொருட்கள் வெடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது, மீறி கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாகவும் சுற்றுசூழலை மாசுப்படுத்தும் விதமாகவும் பட்டாசு வெடிப்பவர்கள் மீது சட்ட விதிகளுக்கு உட்பட்டு காவல்துறை மூலமாக உரிய நடவடிக்கை எடுக்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.1314/2024/எச்1**

**தீர்மான எண்.732, அ.கு :- அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள்.8</u>** :

தேனி மாவட்டம் ,கூடலூர் நகராட்சி வார்டு எண்.10,எல்.எப்.ரோட்டில் அமைந்துள்ள "**கூடலூர் உழைக்கும் மக்கள் அறக்கட்டளை**" அலுவலகக்கட்டிடத்தில் இந்நகராப்பொது மக்களுக்கு பொதுவானதாகவும்,எவ்வித வருமானமும் இன்றி பொதுவுடைமையுடன் அனைத்து சமுதாயத்தினருக்கும் பயன்பெறும் வகையில் புத்தகங்கள்,தினசரி நாளிதழ்கள் மற்றும் மாதாந்திர பத்திரக்கைகள் வைத்து நூலகம் அமைத்து செயல்பட்டு வருவதாகவும் மேற்படி இடத்தில் மின் இணைப்பு இல்லாத காரணத்தினால் இரவு நேரங்களில் வருபவர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாவதாலும்

மின் இணைப்பு பெறுவதற்கு நகராட்சியால் சொத்துவரியிலிருந்து வரிவிலக்கு அளித்து தடையில்லாச்சான்று வழங்கக் கோரி தலைவர்/செயலாளர் அவர்கள் 24.06.2024ல் வழங்கியுள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

"உழைக்கும் மக்கள் அறக்கட்டளை" அலுவலகக்கட்டிம் அமைந்துள்ள இடத்தில் பொது மக்கள் பயன்பெறும் வகையில் பொது நல நோக்குடன் நூலகம் அமைந்துள்ளதால் மின் இணைப்பு பெறும் பொருட்டு சொத்து வரியில் இருந்து வரிவிலக்கு அளித்து தடையில்லாச்சான்று வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.818/2024/அ1**

**தீர்மான எண்.733, அ.கு :- அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள்.9</u> :

கூடலூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் குப்பைகளை மக்கும், மக்காத குப்பைகளாகப் பிரித்து நுண் உரம் தயாரிக்கும் மையம் (MCC) மற்றும் வள மீட்பு மையங்களில் (RRC) கொண்டு சேர்க்கும் பணிக்கு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 35945/2022/EA2 –SWM-20 நாள்.10.01.2023 இன் படி அனுமதி பெறப்பட்டு அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரி குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த Raam & co, மதுரை என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக ந.க.எண்.1965/2021/எச்1, நாள்.11.05.2023 இன் படி மேற்கண்ட நிறுவனத்திற்கு ஓராண்டு காலத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு 11.05.2023 முதல் பணி மேற்கொண்டு வந்த நிலையில் மேற்படி பணிக்காலம் கடந்த 31.05.2024 ஆம் தேதியுடன் முடிவடைந்ததால், மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதியும் மேலும் மேற்கண்ட நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவில் தெரிவித்த நிபந்தனை 7 இல் தெரிவித்துள்ளபடி மூன்று ஆண்டுகளில் பணி உத்திரவு வழங்கப்பட்டது. முதல் ஓராண்டு காலத்திற்கு செயல்பாடுகள் திருப்திகரமாக இருப்பின் ஏற்கனவே பணி மேற்கொண்டு வரும் Raam & co, மதுரை என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத்தின் ஒப்புதல் பெற்று ஓராண்டிற்கு பணி உத்திரவு வழங்கப்பட வேண்டும். ஆனால் அச்சமயத்தில் நாடாளுமன்றத் தேர்தல் நன்னடத்தை விதிகள் 2024 அமலில் இருந்ததால் நகர்மன்ற அனுமதி பெற இயலாத காரணத்தினால் இந்நகராட்சி

துப்புரவு ஆய்வாளர் Raam & co, மதுரை என்ற நிறுவனத்தின் முந்தைய ஓராண்டு காலத்திற்கு செயல்பாடுகள் திருப்திகரமாக இருந்துள்ளதாக சான்றளித்ததின் அடிப்படையில் பொது சுகாதார நலன் கருதியும், மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதியும் 01.06.2024 முதல் 31.08.2024 வரையிலான மூன்று மாத காலத்திற்கு Raam & co, மதுரை என்ற நிறுவனத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.668, நாள்.27.06.2024 இல் அனுமதி பெற்று பணி நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டு பணிமேற்கொண்டு வந்த நிலையில், மேற்கண்ட பணிக்காலம் 31.08.2024 ஆம் தேதியுடன் முடிவடைவதால் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதியும், சுகாதார ஆய்வாளரின் குறிப்பின் படியும் 01.09.2024 முதல் 31.05.2025 வரை மேலும் 9 மாதங்களுக்கு மேற்கண்ட பணியினை ஏற்கனவே மேற்கொண்டு வரும் Raam & co, மதுரை என்ற நிறுவனத்தின் பணி நீட்டிப்பு செய்யவும் மேலும், ஒப்பந்த நிபந்தனையில் தெரிவித்துள்ளபடி பணி நீட்டிப்பு காலத்திற்கு ஏற்கனவே வழங்கி வந்த பட்டியல் தொகையின் ஓராண்டு சராசரியின் அடிப்படையில் பணித்திறன் 90%

மேல் இருப்பின் 10% கூடுதல் பட்டியல் தொகை வழங்கலாம் என உள்ளதால் பணி நீட்டிப்பு காலத்தில் மாதந்தோறும் வழங்கப்படும் பட்டியல் தொகையில் 10% கூடுதலாக வழங்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**நக.எண்.1965/2021/எச்1**

**தீர்மான எண்.734, அ.கு :- அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள்.10</u>** :

கூடலூர் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2022-23- இன்கீழ் ரூ189.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 20 விதைப்பண்ணைத்தெருவில் ( பழைய வரச்சந்தை இடம்) 7860.18 சதுர மீட்டர் பரப்பளவுள்ள இடத்தில் 1058.00 சதுர மீட்டர் பரப்பளவில் கீழ்க்காணும் அளவுகளில் 56 கடைகள் மற்றும் 1 அலுவலக அறை கட்டிடம் வாரச்சந்தை கட்டப்பட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 12.08.2024 அன்று காணொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

| **வ எண்** | **அளவு** | **கடைகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | 2.50 X2.40 ச.மீ | 53 |
| 2 | 2.73 X2.40 ச.மீ | 1 |
| 3 | 4.90 X2.17 ச.மீ | 1 |
| 4 | 3.93 X2.40ச.மீ | 1 |
| 5 | 3.93 X2.40ச.மீ | 1( அலுவலக அறை) |

மேற்காணும் விபரப்படி கட்டப்பட்டுள்ள வாரச்சந்தையினை 2024-25 ஆம் ஆண்டிற்கான பொது ஏலப்பட்டியலில் சேர்த்து பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்படைப்பு செய்திடவும், அதற்கான கீழ்க்கண்டவாறு ஆண்டு உரிமத் தொகை மற்றும் முன்வைப்புத் தொகை நிர்ணயம் செய்திடவும் அதற்கான விளம்பரம் மற்றும் Gazette Notification மற்றும் இதர உத்தேச செலவீனம் ரூ1.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ எண் | ஏல இனம் | பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி பொறுப்புத் தொகை (ரூபாய்) | கூடுதல் பொறுப்புத் தொகை (ரூபாய்) | மின் கட்டணம் வைப்புத் தொகை (ரூபாய்) | உரிம காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 20 விதைப்பண்ணைத் தெருவில் புதியதாக கட்டப்பட்டுள்ள வாரச்சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ3,00,000/- | ரூ1,50,000/- | ரூ1000/- | ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2027 முடிய |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

ஆண்டு குத்தகைத் தொகை மற்றும் முன்வைப்புத் தொகை நிர்ணயம் செய்து மாவட்ட அரசிதழில் வெளியிட்டு 2024-25 ஆம் ஆண்டிற்கான பொது ஏலப்பட்டியலில் சேர்த்து பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க எண்: 160/2024/அ1)**

**தீர்மான எண்.735, அ.கு :- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.11** :

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT)-2024-2025ன் கீழ் கூடலூர் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.9, இராஜீவ் காந்தி நகரில் புதியதாக 3.00 இலட்சம் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டி மற்றும் புதியதாக பகிர்மான குழாய் அமைத்திட ரூ.168.000 இலட்சத்திற்கு 13வது திட்ட அனுமதி மற்றும் கண்காணிப்பு குழு கூட்ட நாள்.09.09.2024.ன்படி நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது..

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண்.754/2024/இ1)**

**தீர்மான எண்.736, அ.கு :- பதிவு செய்யப்பட்டது**

**பொருள்.12**:

கூடலூர் நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் குறித்த விளம்பரத்தினை 2024 ஆம் ஆண்டு தொழில் மலரில் விளம்பரம் செய்வதற்கும், தேனி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அவர்கள் பரிந்துரை செய்யப்பட்ட கீழ் காணும் நாளிதழ்களுக்கு உரிய விளம்பரக்கட்டண தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண். | நாளிதழ் பெயர் | பட்டியல் எண் மற்றும் நாள். | விளம்பர கட்டணம் (ரூ) |
|---|---|---|---|
| 1. | மாலை மலர் | DGL—D24090198/04.10.2024 | 16,000/— |
| 2. | தினமலர் | MD-24411736/11.10.2024 | 19,425/— |
| 3. | தினதந்தி | 2425DGL231024576/12.10.2024 | 26250/— |
| | | **மொத்தம்** | **ரூ .61,675/—** |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

**ந.க.எண்.1426 /2024/இ1)**

**தீர்மான எண்.737, அ.கு :- 1,2 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.13** :

இந்நகராட்சிக்குச் சொந்தமான ஆடடிக்கும் தொட்டியில் 2024-25 முதல் 2026-27 வரை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு 12.09.2024 அன்று நடைபெற்ற பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் 6 நபர்கள் மட்டும் பொது ஏலத்தில் கலந்து கொண்டனர். ஒப்பந்தப்புள்ளி எவரும் வழங்கவில்லை.

| வ எண் | பெயர் மற்றும் முகவரி (திருவாளர்கள்) | ஏலக் கேள்வித் தொகை |
|---|---|---|
| 1 | K. மாயத்தேவர்<br>த/பெ கருப்பத்தேவர்<br>வார்டு எண் 3 பேச்சியம்மன் கோவில் தெரு, கூடலூர். | ரூ1,30,000 |
| 2 | M.S.P.கோபி<br>த/பெ பெரியாண்டித்தேவர்<br>வார்டு எண் 1, பூ சாலமாயத்தேவர் சந்து, கூடலூர். | ரூ1,38,000 |

| | | |
|---|---|---|
| 3 | M.சரவணன்<br>த/பெ மணி<br>வார்டு எண் 20, கழுவன் சொக்கத்தேவர் சந்து,கூடலூர் | ரூ1,37,000 |
| 4 | K.வினித் கர்ணன்<br>த/பெ கர்ணன்<br>வார்டு எண் 1,மந்தையம்மன் கோவில் தெருகூடலூர் | ஏலம் கோரவில்லை |
| 5 | K.கனித்கர் ரத்னா<br>த/பெ கர்ணன்<br>வார்டு எண் 1,மந்தையம்மன் கோவில் தெரு,கூடலூர் | ஏலம் கோரவில்லை |
| 6 | M.அழகுராஜா<br>த/பெ முத்தையாத்தேவர்<br>31A அழகர்சாமி கோவில் தெரு, கூடலூர் | 1,35,000 |

**அலுவலகக்குறிப்பு:**

மேற்கண்ட இனம் 01.04.2024 முதல் துறை ரீதியிலான வசூல் செய்யப்பட்டு வருகிறது. ஏற்கனவே ஒரு முறை ஏல அறிவிப்பு வெளியிட்டு ஏலம் நடைபெறவில்லை. தற்சமயம் 2 ஆம் முறையாக பொது ஏலம் அறிவிப்பு வெளியிட்டு ஏலம் நடைபெற்றுள்ளது. பொது ஏலத்தில் கலந்து கொண்ட 6 நபர்களில் திரு.M.S.P.கோபி, என்பவரது உயர்ந்த பட்ச ஏலக் கேள்வியான ரூ1,38,000/- சென்ற ஆண்டைக்காட்டிலும் ரூ39503/- குறைவாகவும், மூன்றாண்டு சராசரியைக் காட்டிலும் ரூ48378/- குறைவாகவும் உள்ளது. எனவே மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்..

**ந.க எண் 160/2024/அ1)**

**தீர்மான எண்.738, அ.கு :-மறு ஏலம் கோர மன்றம் முடிவு செய்யப்பட்டது.**

**பொருள்.14** :

இந்நகராட்சிக்குச் சொந்தமான தினசரி சந்தையயில் 2024-25 முதல் 2026-27 வரை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு 12.09.2024 அன்று நடைபெற்ற பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் 2 நபர்கள் மட்டும் பொது ஏலத்தில் கலந்து கொண்டனர். ஒப்பந்தப்புள்ளி எவரும் வழங்கவில்லை.

| வ எண் | பெயர் மற்றும் முகவரி (திருவாளர்கள்) | ஏலக் கேள்வித் தொகை(ரூ) |
|---|---|---|
| 1 | P.கௌதம்<br>வார்டு எண்1, 23A மந்தையம்மன் கோவில் தெரு,<br>கூடலூர் | 4,10,000 |
| 2 | K.வினித் கர்ணன்<br>த/பெ கர்ணன்<br>வார்டு எண் 1,மந்தையம்மன் கோவில் தெரு,<br>கூடலூர் | 4,05000 |

**அலுவலகக்குறிப்பு:**

மேற்கண்ட இனம் 01.04.2022 முதல் துறை ரீதியிலான வசூல் செய்யப்பட்டு வருகிறது. ஏற்கனவே பல முறை ஏல அறிவிப்பு வெளியிட்டு ஏலம் நடைபெறவில்லை. தற்சமயம் 12.09.2024 அன்று நடைபெற்ற பொது ஏலம் அறிவிப்பு வெளியிட்டு ஏலம் நடைபெற்றுள்ளது. பொது ஏலத்தில் கலந்து கொண்ட 2 நபர்களில் திரு P.கௌதம், என்பவரது உயர்ந்த பட்ச ஏலக் கேள்வியான ரூ4,10,000/- சென்ற ஆண்டைக்காட்டிலும்

ரூ1,03875/- குறைவாகவும், மூன்றாண்டு சராசரியைக் காட்டிலும் ரூ1,29,569/- குறைவாகவும் உள்ளது. எனவே மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்..

**ந.க எண் 160/2024/அ1)**

**தீர்மான எண்.739, அ.கு :- மறு ஏலம் கோர மன்றம் முடிவு செய்யப்பட்டது.**

**பொருள்.15** :

இந்நகராட்சிக்குச் சொந்தமான மயானத்தில் உள்ள 40 இலவமரம் மற்றும் 57 புளிய மரங்களின் மேற்பலன் அனுபவிக்கும் உரிமத்திற்கு 2024-25 முதல் 2026-27 வரை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு 12.09.2024 அன்று நடைபெற்ற பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் 4 நபர்கள் மட்டும் பொது ஏலத்தில் கலந்து கொண்டனர். ஒப்பந்தப்புள்ளி எவரும் வழங்கவில்லை.

| வ எண் | பெயர் மற்றும் முகவரி (திருவாளர்கள்) | ஏலக் கேள்வித் தொகை(ரூ) |
|---|---|---|
| 1 | K.வினித்கர்ணன்<br>த/பெ கர்ணன்<br>வார்டு எண் 1,மந்தையம்மன் கோவில் தெரு, கூடலூர் | 22,000 |
| 2 | V,மோகன்தாஸ்<br>த/பெ விஸ்வநாதன் செட்டியார்<br>மெயின் பஜார், கூடலூர் | 22,500 |
| 3 | P.இராமர்<br>த/பெ பம்பையத்தேவர்<br>வார்டுஎண் 2, எல்லைத்தெரு, கூடலூர் | 23,000 |
| 4 | M.அழகுராஜா<br>த/பெ முத்தையாத்தேவர்<br>31A அழகர்சாமி கோவில் தெரு, கூடலூர் | 21,500 |

**அலுவலகக்குறிப்பு:**

பொது ஏலத்தில் கலந்து கொண்ட 4 நபர்களில் திரு P.இராமர், என்பவரது உயர்ந்த பட்ச ஏலக் கேள்வியான ரூ23,000/- சென்ற ஆண்டைக்காட்டிலும் ரூ2604/- கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரியைக் காட்டிலும் ரூ1584/- கூடுதலாகவும் உள்ளது. எனவே மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**ந.க எண் 160/2024/அ1)**

**தீர்மான எண்.740, அ.கு :- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.16** :

இந்நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கான நுழைவுக்கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 2024-25 முதல் 2026-27 வரை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு 12.09.2024 அன்று நடைபெற்ற பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் 2 நபர்கள் மட்டும் பொது ஏலத்தில் கலந்து கொண்டனர். ஒப்பந்தப்புள்ளி எவரும் வழங்கவில்லை.

| வ எண் | பெயர் மற்றும் முகவரி (திருவாளர்கள்) | ஏலக் கேள்வித் தொகை(ரூ) |
|---|---|---|
| 1 | P.வினோத்குமார்<br>த/பெ பால்ராஜ்<br>வார்டு எண் 2, 24 எல்லைத் தெரு, கூடலூர் | 1,83,000 |

| | | |
|---|---|---|
| 2 | K.கனித்கர் ரத்னா<br>த/பெ கர்ணன்<br>வார்டு எண் 1,மந்தையம்மன் கோவில் தெரு, கூடலூர் | 1,88000 |

**அலுவலகக்குறிப்பு:**

மேற்கண்ட இனம் 01.04.2024 முதல் துறை ரீதியிலான வசூல் செய்யப்பட்டு வருகிறது. ஏற்கனவே ஒரு முறை ஏல அறிவிப்பு வெளியிட்டு ஏலம் நடைபெறவில்லை. தற்சமயம் 2 ஆம் முறையாக பொது ஏலம் அறிவிப்பு வெளியிட்டு ஏலம் நடைபெற்றுள்ளது பொது ஏலத்தில் கலந்து கொண்ட 2 நபர்களில் திரு K.கனித்கர் ரத்னா, என்பவரது உயர்ந்த பட்ச ஏலக் கேள்வியான ரூ1,88,000/- சென்ற ஆண்டைக்காட்டிலும் ரூ33933/- குறைவாகவும், மூன்றாண்டு சராசரியைக் காட்டிலும் ரூ45030/- குறைவாகவும் உள்ளது. எனவே மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்..

**ந.க எண் 160/2024/அ1)**

**தீர்மான எண்.741, அ.கு :- மறு ஏலம் கோர மன்றம் முடிவு செய்யப்பட்டது**

**பொருள்.17** :

கூடலூர் நகராட்சிக்குச் சொந்தமான கீழ்க்காணும் 4 இனங்களுக்கு 12.09.2024 அன்று பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் வரிசை எண் 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு பொது ஏலத்தில் கலந்து கொள்ள தலா ஒரே ஒரு நபர் மட்டுமே வைப்புத் தொகை செலுத்தியிருந்தனர். ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. வரிசை எண் 4 ல் உள்ள இனத்திற்கு ஏலத்தில் கலந்து கொள்ள எவரும் வைப்புத் தொகை செலுத்தவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. எனவே இவ்வினங்களுக்கு மறு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| 1 | பேருந்து நிலையத்தில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் |
| 2 | கூடலூர் நகராட்சி காந்திஜி பூங்காவில் உள்ள கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். |
| 3 | கூடலூர் நகராட்சி சந்தையில் உள்ள 23 புளிய மரங்கள், **இராஜா கிணறு** 46 தென்னை மரங்கள், 2 இலவமரம் 2 புளிய மரம் ஆகியவற்றின் மேற்பலன் அனுபவிக்கும் உரிமம்.. |
| 4 | **ஒட்டான்குளம்** கரையில் உள்ள 56 இலவமரம், காந்திஜிபூங்கா, தண்ணீர் தொட்டியில் உள்ள இலவமரம், மாமரம், தென்னைமரம் முதலியன மேற்பலன் அனுபவிக்கும் உரிமம் |

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க எண் 160/2024/அ1

**தீர்மான எண்.742, அ.கு :- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.18** :

இந்நாராட்சி பொது சுகாதாரப்பிரிவு தூய்மை பணியாளர்கள் மழைக்காலங்களில் பாதுகாப்பான முறையில் பணிகள் மேற்கொள்ள நீர் எதிர்ப்பு ஆடை(Rain Coat), காலணிகள் மற்றும் ஷூ 2024- 2025 ஆம் ஆண்டிற்கு கீழ்கண்டவாறு வாங்கி வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. அதற்கான உத்தேச செலவினம் ரூ. 1,25,000/- த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருட்களின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நீர் எதிர்ப்பு ஆடை(Rain Coat) | 55 |
| 2 | காலணிகள் | 44 |
| 3. | ஷூ | 11 |

**அலுவலகக் குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்

**ந.க.எண். 1313/2024/எச்1**

**தீர்மான எண்.743, அ.கு :- 1,2 அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.19** :

கூடலூர் நகராட்சி வார்டு எண்-9, இராஜீவ் காந்தி நகர் பைப்பாஸ் அருகில் புதியதாக பகிர்மான குழாய் மற்றும் கேட் வால்வு பிட் அமைப்பதற்கு ரூ2,20,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

**ந.க.எண்.1319 /2024/இ1)**

**தீர்மான எண்.744, அ.கு :- 1,2 அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.20** :

கூடலூர் நகராட்சி வார்டு எண்-1,வீரணத்தேவர் தெருவில் ஏற்கனவே உள்ள மின் விசை பம்பிற்கு புதியதாக ஆழ்துளை கிணறு அமைப்பதற்கு ரூ2,40,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

**ந.க.எண். 1323 /2024/இ1**

**தீர்மான எண்.745, அ.கு :- 1,2 அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.21** :

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளிலும் தினசரி நோய்தடுப்பு பணிகள் (டெங்கு, மலேரியா, சிக்கன்குனியா) இதர நோய் தடுப்பு பணிகள் கொசு புழு ஒழிப்பு பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. டெங்கு நோய் தடுப்பு பணிகளுக்காக கொசுப்புழு உருவாகும் இடங்களில் தினசரி டெமிபாஸ் (Temephos 50%) மருந்து

பயன்படுத்தி அழிக்கும் பணிகளுக்கு தேவையான டெமிபாஸ் (Temephos 50%) **600** லிட்டர் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,50,000/-திற்க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது**.**

**<u>அலுவலகக் குறிப்பு</u>**:

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 1146/2024/எச்1**

**தீர்மான எண்.746, அ.கு :- அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள்.22</u> :

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளிலும் கொசு புழு ஒழிப்பு பணிகள் மற்றும் முதிர்கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, மேலும் பொது மக்களுக்கு நோய் தொற்று பரவாத வகையில் கழிவுநீர் கால்வாய்கள், நீர் நிலைகள், மற்றும் நீர் தேங்கும் இடங்களில் கொசுப்புழுக்கள் மற்றும் இதர பூச்சியினங்களை கட்டுபடுத்த தேவையான BT(Bacilus Thuringiensis) பவுடர் **360** கிலோ வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,50,000/-திற்க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**<u>அலுவலகக் குறிப்பு</u>**:

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 1147 /2024/எச்1**

**தீர்மான எண்.747, அ.கு :- அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள்.23</u> :

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.14393/2022/மாதி3, நாள்.14.06.2023 கடிதத்தில் தெரிவித்துள்ளபடி நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகள் மற்றும் குமுளி மலைச்சரிவு பகுதிகளில் தென்மேற்கு பருவமழை முன்னெச்சரிக்கை தொடர்பான பணிகளான கழிவுநீர் கால்வாய்கள், நீரோடைகள், மழைநீர் வடிகால்களை மினி கிட்டாச்சி வாகனம் உதவியுடன் மணல் அடைப்புகள் மற்றும் புதர்களை சுத்தம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,50,000/-திற்க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**:

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 1148/2024/எச்1**

**தீர்மான எண்.748, அ.கு :- அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள்.24</u> :

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளிலும் களப்பணியாளர்கள் மூலமாக டெங்கு தடுப்பு பணிகள் மற்றும் இதர தொற்றுநோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் நோய் தொற்று தடுப்பு பணிகளை தினசரி மேற்கொண்டு கொசுக்களை கட்டுபடுத்த புகை பரப்புதல் போன்ற பணிகள் மேற்கொள்ளபட்டு வருகிறது, எனவே அதற்கு தேவையான பைரித்திரம் (Phyrethrum 2%) **360** லிட்டர் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,50,000/-திற்க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>:

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 1145/2024/எச்1**

**தீர்மான எண்.749, அ.கு :- அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள்.25</u> :

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023-ன் படி நகராட்சி பகுதிகளில் நடைபெறும் வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம் வழங்கிட உரிமம் வழங்குவதற்கான நிறுவனங்களின் வகைப்பாட்டினை அட்டவணை I, II, மற்றும் IIIல் வகைப்படுத்தி குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச கட்டணங்களின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தகுந்தார் போல் நிர்ணயம் செய்து உரிமம் வசூலித்து உரிமம் வழங்கிட வேண்டியுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023ல் தொழில் உரிமங்கள் வழங்குவது குறித்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. இதன் படி இந்நகராட்சி பகுதியில் இயங்கிவரும் தொழில்களுக்கு பின்வரும் விவரப்படி உரிமக் கட்டணம் 01.04.2024 ஆம் தேதி முதல் நிர்ணயம் செய்து தொழில் உரிமம் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக**

**உரிமம்**

வர்த்தக உரிமத்திற்கான விண்ணப்பம் (1) அட்டவணைகள் I, II, III -ல் குறிப்பிடப்பட்டுள்ள, பொது அல்லது தனியார் என, எந்தவொரு வர்த்தகம் அல்லது வியாபாரத்தினையும், ஆணையாளரால் வழங்கப்பட்ட ஒரு உரிமமின்றி நகராட்சி எல்லைக்குள் எவரும் மேற்கொள்ளக்கூடாது.

அத்தகைய உரிமம் வழங்குவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும், கூடலூர் நகர் மன்றத்தால் வரையறுக்கப்பட்ட கட்டணத்துடன் படிவம் 1 இல் ஆணையாளருக்கு சமர்பிக்கப்பட வேண்டும் மற்றும் பின்வரும் ஆவணங்கள் அத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

தனிநபரைப் பொறுத்தவரையில் ஆதார் அட்டை மற்றும் நபர்களின் குழு அல்லது நிறுவனத்தினைப் பொறுத்தவரையில் நிலையான கணக்கு எண் அட்டை அல்லது கூட்டுரிம சான்றிதழ் போன்ற அடையாள சான்று.உரிமம் விண்ணப்பிக்கப்படுகிற வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் முகவரியை தெளிவாக காண்பிக்கும் குத்தகை பத்திரம் அல்லது வருமானம் ஒப்பந்தம் அல்லது சமீபத்திய சொத்து வரி ரசீது அல்லதுசமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விவர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

செல்லுபடியாகக் கூடிய முகவரிச்சான்று எதுவும் விண்ணப்பதாரரிடம் இல்லையெனில், அவர் படிவம் 17 இல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்ப்பிக்க வேண்டும்.

அட்டவணையின் கீழான விண்ணப்பங்களுக்கு, நிறுவனத்தின் வகைப்பாடு குறித்து தீர்மானிப்பதற்கு உதயம் பதிவுச்சான்றிதழ் அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விபர அறிக்கை அல்லது வருமான வரி விபர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

உதயம் பதிவுச் சான்றிதழ் அல்லது எந்தவொரு வரி விபர அறிக்கையும் விண்ணப்பத்தாரரிடம் இல்லையெனில், அவர் உரிமம் கோரப்படுகிற நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்றளிக்கும் படிவம் 18-இல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்க வேண்டும்.அதன் பயன்பாட்டுக்கு உள் விதி (1) -இன் கீழ் உரிமம் தேவைப்படுகிற ஒவ்வொரு இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவரும், அத்தகைய நோக்கங்களுக்காக அந்த இடம் பயன்படுத்தப்படுவதற்கு முன்பு 45 நாட்களுக்கு குறையாமலும், 90 நாட்களுக்கு மிகாமலும் அத்தகைய உரிமத்திற்காக ஆணையாளரிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண் 289 உள் வழங்கப்பட்ட உரிமம், பிரிவு (6) நிபந்தனைகளுக்குட்பட்டதாகும். வரையறுக்கப்பட்டுள்ள விதி (5) ன் கீழ் விதிமுறைகள் மற்றும் உரிமம் புதுப்பிப்பதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் உரிமம் காலாவதியாவதற்கு மூன்று மாதத்திற்கு முன்பு, மன்றத்தால் நிர்ணயிக்கப்படுகிற உரிமக் கட்டணத்துடன், படிவம் 1ல் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

உரிமம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் போது உரிமம் பெறுபவரால் நகராட்சிக்குசெலுத்தப்பட வேண்டிய வரி அல்லது கட்டணம் எதுவும் நிலுவையில் இருக்கக்கூடாது.

அட்டவணை I, II, III, மற்றும் IV ல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமக் கட்டண விகிதங்கள் 01.04.2024 தேதி முதல் அமுலுக்கு வரும்.

குறிப்பு (எ) எந்தவொரு நிதி ஆண்டும் ஏப்ரல் முதல் தேதி துவங்கி மார்ச் 31ம் தேதி முடிவடையும்.

## அட்டவணை I

[See rules 289(1), (2) and (5)]

**1 பொருந்தக்கூடிய தன்மை:**

1948 ம் ஆண்டு தொழிற்சாலை சட்டம் (1948 ம் ஆண்டு மத்தியச் சட்டம் LXIII) 1951-ம் ஆண்டு தொழிற்சாலைகள் (மேம்பாடு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் (1951-ம் ஆண்டு மத்தியச் சட்டம் 65) 1959 ஆம் ஆண்டு படைக்கலச் சட்டம் (1959-ம் ஆண்டு மத்தியச் சட்டம் 54), 1884-ம் ஆண்டு வெடிபொருட்கள் சட்டம் (1884ம் ஆண்டு மத்தியச் சட்டம் IV) மற்றும் 1934ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம் (1934ம் ஆண்டு மத்தியச் சட்டம் XXX) ஆகியவற்றின் கீழ் உரிமம் வழங்கப்படாத பொருள் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள எந்தவொரு தொழில் அல்லது தொழிற்சாலை அல்லது நிறுவனத்திற்கும் இது பொருந்தும்.

**2. உரிமக்கட்டணம் :**

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான உரிமக் கட்டணம், 2006 ஆம் ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டத்தின் படியான (2006-ம் ஆண்டு மத்தியச் சட்டம் 27), அத்தகைய தொழில் நிறுவனங்களின் வகைப்பாட்டின் அடிப்படையில் விதிக்கப்படும்.

அ. விண்ணப்பதாரர். ஒரு செல்லுபடியாகக்கூடிய உதயம் பதிவினை கொண்டிருக்க வில்லையெனில், அந்த தொழிற்சாலையின் வகைப்பாடு, பொருட்கள் மற்றும் சேவைகள் வரி எண் (GST எண்) அல்லது சமீபத்திய வருமான வரி விபர அறிக்கையினை பயன்படுத்தி தீர்மானிக்கப்படும்.

ஆ. விண்ணபத்தாரர். ஒரு செல்லுபடியாகக்கூடிய உதயம் பதிவுச் சான்றிதழ் மற்றும் வரி விவர அறிக்கைகளை கொண்டிருக்கவில்லை எனில், உரிமம் கோரப்படுகிற தொழில் நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்றளித்து படிவம் 17 ல் உள்ள பிரமாணப் பத்திரம் ஒன்றை அவர் சமர்ப்பிக்க வேண்டும்.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023-ல் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்கிட உரிமக்கட்டணம் நிர்ணயம் செய்திட அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள குறைந்த பட்ச மற்றும் அதிக பட்ச தொழில் உரிமக்கட்டணங்களுக்கான பட்டியல்

(a) குறு தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 1500/- | 3500/- |

(b) சிறு தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 3500/- | 5000/- |

(b) நடுத்தர தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 3500/- | 5000/- |

(c) மற்றவை(அல்லது) பெரிய தொழிற்சாலை (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 3500/- | 5000/- |

வர்த்தகங்கள் /வியாபாரங்களின் பட்டியல் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| வ.எண் | வர்த்தகங்கள் /வியாபாரங்களின் பட்டியல் | குறு தொழில் நிறுவனங்கள் OTO 0104.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | சிறு தொழில் நிறுவனங்கள் **ஸ்ரீ** 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | நடுத்தா தொழில் நிறுவனங்கள் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | மற்றவை (அல்லது) பெரிய தொழிற்சாலை **நஜீக** 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | தையல் பொருட்கள் உற்பத்தி செய்தல் | **3000/-** | **3750/-** | **8000/-** | **25000/-** |
| 2 | தையல் இயந்திரங்கள் உற்பத்தி செய்தல் | **3000/-** | **3750/-** | **8000/-** | **25000/-** |
| 3 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | **3000/-** | **4000/-** | **9000/-** | **30000/-** |
| 4 | அனைத்து வகையான மின் மோட்டார்கள் மற்றும் பம்புகளை உற்பத்தி செய்தல் | **3000/-** | **4000/-** | **9000/-** | **30000/-** |
| 5 | மின்சார மோட்டார்கள் மற்றும் 5 பம்புகளை சேமித்து வைத்து விற்பனை செய்தல் | **2500/-** | **4000/-** | **9000/-** | **30000/-** |
| 6 | கல் உடைத்தல் மற்றும் நொறுக்குதல் | **2000/-** | **3750/** | **7750/-** | **30000/-** |
| 7 | காகித தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | **2500/-** | **4000/-** | **9000/-** | **30000/-** |
| 8 | அனைத்து வகையான உலோகங்களையும் உற்பத்தி செய்தல் | **3000/-** | **4000/-** | **9000/-** | **30000/-** |
| 9 | அனைத்து வகையான உலோகங்களையும் உற்பத்தி செய்தல் | **3000/-** | **4000/-** | **9000/-** | **25000/-** |
| 10 | அனைத்து வகையான கொள்கலன்களையும். | **2500/-** | **5000/-** | **10000/-** | **25000/-** |
| 11 | அனைத்து வகையான தொழிற்சாலை இயந்திரங்களை உற்பத்தி செய்தல் | **3000/-** | **5000/-** | **10000/-** | **30000/-** |
| 12 | மோட்டார் வாகன உதிரி பாகங்களை உற்பத்தி செய்தல் | **3000/-** | **4000/-** | **9000/-** | **30000/-** |
| 13 | அனைத்து வகையான கட்டுமானப் பொருட்களை உற்பத்தி செய்தல் | **3000/-** | **4000/-** | **9000/-** | **30000/-** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | அனைத்து வகையான பொறியியல் பணிகள் | 2500/- | 3750/- | 8000/- | 25000/- |
| 15 | செங்கல் சூளை | 3000/- | 3750/- | 8000/- | 25000/- |
| 16 | அனைத்து வகையான ஆட்டோமொபைல் உதிரி பாகங்களை உற்பத்தி செய்தல் | 3000/- | 4000/- | 9000/- | 25000/- |
| 17 | அனைத்து வகையான ஒப்பனை பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 4000/- | 9000/- | 30000/- |
| 18 | அனைத்து வகையான நாட்டு மருந்துகள், ஒப்பனை பொருட்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைத் உற்பத்தி செய்தல். | 3000/- | 4000/- | 9000/- | 30000/- |
| 19 | அணைத்து வகையான கட்டுருவாக்க பணிகள் (Fabrication Works) | 3000/- | 4000/- | 9000/- | 30000/- |
| 20 | துருப்பிடிக்காத எஃகு வேலை மற்றும் மெருகூட்டல் | 3000/- | 4000/- | 9000/- | 30000/- |
| 21 | அனைத்து வகையான இரசாயன பொருட்களை உற்பத்தி செய்தல் | 3000/- | 4000/- | 9000/- | 30000/- |
| 22 | அணைத்து வகையான மருத்துவ உபகரணங்களை உற்பத்தி செய்தல் | 3000/- | 4000/- | 9000/- | 30000/- |
| 23 | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தப்படுத்தும் பொருட்களை உற்பத்தி செய்தல் | 3000/- | 5000/- | 10000/- | 30000/- |
| 24 | அனைத்து வகையான இயந்திர எண்ணெய்களை உற்பத்தி செய்தல் | 3000/- | 4000/- | 9000/- | 25000/- |
| 25 | கொதிகலன் உற்பத்தி செய்தல் | 3000/- | 4000/- | 9000/- | 25000/- |
| 26 | காற்றுப் பதனிகளை உற்பத்தி செய்தல் | 2500/- | 4000/- | 9000/- | 25000/- |
| 27 | அனைத்து வகையான கண்ணாடி பொருட்களை உற்பத்தி செய்தல் | 3000/- | 4000/- | 9000/- | 30000/- |
| 28 | அனைத்து வகையான எழுதுபொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 4000/- | 9000/- | 30000/- |
| 29 | அனைத்து வகையான ரப்பர்பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 4000/- | 9000/- | 30000/- |
| 30 | அனைத்து வகையான வீட்டு உபயோக பொருட்களை உற்பத்தி செய்தல் | 3000/- | 5000/- | 10000/- | 25000/- |
| 31 | பூச்சிக்கொல்லிகளை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 25000/- |
| 32 | பேட்டரிகளை உற்பத்தி செய்தல் | 3000/- | 5000/- | 10000/- | 25000/- |
| 33 | மீன்பிடி வலைகள் மற்றும் கொசு வலைகள் உற்பத்தி | 2500/- | 4000/- | 9000/- | 30000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செய்தல் | | | | |
| 34 | அணிகலன்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 30000/- |
| 35 | இசைக்கருவிகளை உற்பத்தி செய்தல் | 2500/- | 4000/- | 9000/- | 30000/- |
| 36 | துப்புரவு சாதனங்கள் பொருட்களை உற்பத்தி செய்தல் | 3000/- | 4000/- | 9000/- | 30000/- |
| 37 | சுண்ணாம்பு சூளைகள் | 2500/- | 3750/- | 7750/- | 25000/- |
| 38 | அனைத்து வகையான கயிறு நார் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 4000/- | 9000/- | 30000/- |
| 39 | அனைத்து வகையான ஆடைகள் / துணிகள் / ஜவுளிகளை உற்பத்தி செய்தல் | 3000/- | 5000/- | 10000/- | 30000/- |
| 40 | அனைத்து வகையான தோல் பொருட்களை உற்பத்தி செய்தல் | 3000/- | 5000/- | 10000/- | 30000/- |
| 41 | அனைத்து வகையான மர / 41 பிளைவுட் / சன்மைக்கா பொருட்களை உற்பத்தி செய்தல் | 3000/- | 4000/- | 9000/- | 30000/- |
| 42 | அனைத்து வகையான வண்பொருள்களை (Hardwares) செய்தல் | 3000/- | 4000/- | 9000/- | 30000/- |
| 43 | அனைத்து வகையான விளையாட்டுப் சாதனங்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 4000/- | 9000/- | 30000/- |
| 44 | அனைத்து வகையான வேளாண் பணி பயன்பாடு பொருட்கள் | 2500/- | 4000/- | 9000/- | 30000/- |
| 45 | அனைத்து வகையான உணவெண்ணெய்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 4000/- | 9000/- | 30000/- |
| 46 | பால் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 4000/- | 9000/- | 30000/- |
| 47 | டீ (Tea) தூள் தயாரித்தல் | 2500/- | 4000/- | 9000/- | 30000/- |
| 48 | காபி (coffee) துள் தயாரித்தல் | 2500/- | 4000/- | 9000/- | 30000/- |
| 49 | நகராட்சியால் கருதப்படும் இதர உற்பத்தி இனங்கள் | 2000/- | 4000/- | 6000/- | 10000/- |

## அட்டவணை II

[See rules 289 (1)(2) and (5)]

1 பொருந்தும் தன்மை:

(1) இந்த அட்டவணை. எந்த ஒரு வர்த்தகம் அல்லது வியாபாரம் மேற்கொள்ளப்படுகிற அல்லது வாடிக்கையாளர்களுக்கு சேவைகள் அளிக்கப்படுகிற எந்தவொரு கடை அல்லது வணிக நிறுவனத்திற்கும். அதே வளாகத்தில் உள்ளதோ அல்லது பிறவாறாக உள்ளதோ அத்தகைய வியாபாரம் தொடர்பாக பயன்படுத்தப்படுகிற சரக்கு அறைகள், கிடங்குகள் மற்றும் பண்டகசாலைக்கும் பொருந்தும்.

2. பின்வரும் வகைப்பாடுகளுக்கு இந்த அட்டவணை பொருந்தாது.

1)இந்த விதிகளின் மற்ற அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகைப்பாடுகள்.

2) 2013-ம் ஆண்டு நிறுமச் சட்டத்தின் கீழ் (2013ம் ஆண்டு மத்தியச் சட்டம் 18) பதிவு செய்யப்பட்ட நிறுமங்கள், வங்கிகள், நிதிநிறுவனங்கள்.

3) சம்மந்தப்பட்ட சட்டங்களின் கீழ் உரிமம் பெற்ற உணவல் மையங்கள் (Browsing Centres) மற்றும் உடற்பயிற்சிக் கூடங்கள்.

4) 1959-ம் ஆண்டு படைக்கலச் சட்டம் (1959 ம் ஆண்டு மத்தியச் சட்டம் 54), 1884-ம் ஆண்டு வெடி பொருட்கள் சட்டம் (1884ம் ஆண்டு மத்தியர் சட்டம் IV) மற்றும் 1934 ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம் (1934-ம் ஆண்டு மத்தியச் சட்டம் XXX) மற்றும் 1952-ம் ஆண்டு ஒளிப்பதிவுச் சட்டத்தின் கீழ் (1957-ம் ஆண்டு மத்தியச் சட்டம் 37) உரிமம் பெற்ற வர்த்தகங்கள் மற்றும் வியாபாரங்கள் மற்றும்

5) 2010-ம் ஆண்டு மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் (2010-ம் ஆண்டு மத்தியச் சட்டம் 23)

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 ல் அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு உரிமம் வழங்கிட உரிமக்கட்டணம் நிர்ணயம் செய்திட அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள குறைந்த பட்ச மற்றும் அதிக பட்ச தொழில் உரிமக்கட்டணங்களுக்கான பட்டியல்

1.உரிமக் கட்டணம் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 700/- | 10,000/- |

2. வர்த்தகங்கள் அல்லது வியாபாரங்களின் பட்டியல்:

| வ.எண் | வர்த்தகங்கள் வியாபாரங்களின் பட்டியல் | நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|---|
| 1 | அரசால் அனுமதிக்கப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 2 | தையல் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 3 | அனைத்து இயந்திரங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 |
| 4 | அனைத்து வகையான கையால் செய்யப்பட்ட பொருட்கைளயும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 5 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னனு பொருட்கைளயும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 6 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னனு சர்விஸ் மையங்கள் | 1000 |

| | | |
|---|---|---|
| 7 | அனைத்து வகையான காகித பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 8 | கழிவுதாள் கடை பழையவேண்டாத பொருட்கள் | 2000 |
| 9 | நூற்புவேலைகள் | 1000 |
| 10 | அனைத்து வகையான இயந்திர எண்ணெய்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 11 | காற்றுபதனிகளை பழுதுபார்த்தல் (Air Conditioner) | 1000 |
| 12 | காற்றழுத்திகள் (Air Compressors) | 750 |
| 13 | அனைத்து வகையான உலோகங்களையும் சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 14 | எடைஇயந்திர நிலையங்கள் (Weighing Machines) | 1000 |
| 15 | பேட்டரி சார்ஜ் செய்கிறகடைகள் | 750 |
| 16 | மோட்டார் வாகனஷோரூம்கள் | 3000 |
| 17 | தலைகவசக்கடைகள் | 1500 |
| 18 | இருசக்கர வாகனங்கள் மற்றும் மூன்று சக்கரவாகனங்களுக்கான ஆட்டமொபைல்பழுதுப்பார்ப்பு மையங்கள் | 1500 |
| 19 | இலகுரகமோட்டார் வாகனங்கள் மற்றும் கனரகமோட்டார் வாகனங்களுக்கான ஆட்டமொபைல்பழுதுப்பார்ப்பு மையங்கள் | 2000 |
| 20 | அனைத்து வகையான மோட்டார்கள் மற்றும் பம்புகளையும் சேமித்துவைத்தல் விற்பனை செய்தல் | 1500 |
| 21 | மோட்டார் வாகன உதிரிபாகங்களை சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 22 | அனைத்து வகையான ஒப்பனை பொருட்களையும் சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 23 | அனைத்து வகையான தொழிற்சாலை இயந்திரங்களையும் சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 |
| 24 | அனைத்து வகையான இரசாயனப் பொருட்களையும் சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 25 | பூச்சிக்கொல்லிமருந்துகளை சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 26 | அனைத்து வகையான மருத்துவஉபகரணங்களையும் சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 27 | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தம் செய்யும் பொருட்களையும் சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 28 | அனைத்து வகையான கண்ணாடி பொருட்களையும் சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 29 | அனைத்து வகையான வன் பொருட்களையும் (Hardwares) | 2000 |

| | | |
|---|---|---|
| | சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | |
| 30 | அனைத்து வகையான ஆட்டோமொபைல் உதிரிபாகங் களையும் சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 31 | அனைத்து வகையான எழுதுபொருட்களையும் சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 32 | அனைத்து வகையான கட்டுமானப்பொருட்களையும் சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 33 | அனைத்து வகையான ரப்பர்பொருட்களையும் சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 34 | அனைத்து வகையான வீட்டு உபயோக உபகரணங்களையும் சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 |
| 35 | அணிகலன்களை சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 3000 |
| 36 | இசைகருவிகளை சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 37 | துப்புரவு பொருட்களை சேமித்துவைத்தல் | 750 |
| 38 | அனைத்து வகையான தென்னை நார்பொருட்களை சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 39 | அனைத்து வகையான ஆடைகள் துணிகள்ஜவுளிகளை சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 5000 |
| 40 | அனைத்து வகையான மறுபட்டையிடப்பட்ட டயர்கள் டயர்களையும் சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 41 | அனைத்து வகையான கொள்கலன்கள் மற்றும் பாத்திரங்களையும் சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 42 | அனைத்து வகையான அறைகலன்களையும் (Furnitures) சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 |
| 43 | அனைத்து வகையான மரப்ளைவுட் சன்மைகா பொருட்களையும் சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 44 | மரவடிவமைப்புகள் விற்பனை | 1000 |
| 45 | ஷாமியானா மற்றும் பாத்திரங்களை வாடகைக்கு விடுதல் | 1500 |
| 46 | அனைத்து வகையான தோல் பொருட்களையும் வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 47 | அனைத்து வகையான மரப்ளைவுட் சன்மைகாபொருட்களையும் சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 48 | அனைத்து வகையான விளையாட்டு பொருட்களையும் வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 49 | அனைத்து வகையான கைக்கடிகாரம் மற்றும் கைக்கடிகார உதிரி பாகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 50 | அழைப்பிதழ்கள் வாழ்த்து அட்டைவிற்பனை அச்சகம் கணிப்பொறி பதிப்பகம் உட்பட | 1000 |
| 51 | மருந்துக்கடைகள் | 1000 |

| | | |
|---|---|---|
| 52 | மருத்துவஉபகரணங்கள் சாதனங்கள் மற்றும் உட்பொருத்திகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 53 | மூங்கில்,தென்னை ஓலை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 54 | எரியக்கூடிய பொருட்கள் ஃபிலிம் செல்லுலாய்டு பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 55 | புல் மற்றும் வைக்கோல்வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 750 |
| 56 | முட்டுக்கொடுக்கும் பொருட்களை வாடகைக்குவிடுதல் (CenteringMaterials) | 1500 |
| 57 | அனைத்து வகையான வேளாண் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 58 | அனைத்து வகையான உரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 |
| 59 | திரைப்ட செயலாக்கம் மற்றும் வண்ணமயமாக்கல் | 5000 |
| 60 | வாகனநிறுத்தநிலையங்கள் | 1000 |
| 61 | திரைப்படஆய்வகங்கள் | 5000 |
| 62 | பார்சல் புக் செய்யுமிடங்கள் தூதஞ்சல் (Courier) சேவைகள் | 1000 |
| 63 | கேபிள்டி.வி. சேவைகள் | 2000 |
| 64 | கேடயங்கள் சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 65 | உள்நாட்டுபட்டுப்புழுவளர்ப்பு பொருட்கள் | 1000 |
| 66 | பட்டாணிவறுவல் | 750 |
| 67 | ஃபேன்சி ஸ்டோர் | 1000 |
| 68 | பஞ்சுமெத்தை தலையணை சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 69 | மிதிவண்டி பழுதுபார்க்கும் கடைகள் | 750 |
| 70 | பல்பொருள் அங்காடி | 3000 |
| 71 | ஜெராக்ஸ் கடை, கணிப்பொறி பதிப்பகமையங்கள், இ சேவை மற்றும் இணையநிலையம் | 1000 |
| 72 | ஸ்டிக்கர் கடைகள் | 1000 |
| 73 | தாவரநாற்றுகள் கடைகள் | 750 |
| 74 | புகைப்பட சட்டகம் செய்தல் | 1000 |
| 75 | தார்பாலின்களை சேமித்து வைத்தல் | 1000 |
| 76 | பொற்கொல்லர்கள் | 750 |
| 77 | அனைத்து வகையான துப்புரவு பொருட்களையும் சேமித்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல் (கிருமிநாசினிகள்) | 1500 |

| | | |
|---|---|---|
| 78 | டைல்ஸ் மார்பிள்கள் கிரானைட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2500 |
| 79 | தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் சாதனங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 80 | முடிவெட்டும் நிலையங்கள் | 1000 |
| 81 | அழகுநிலையங்கள் தடுப்புசுவர்கள் அல்லது அறைகள் இல்லாத ஸ்பாஸ் | 2000 |
| 82 | தையல்கடைகள் | 1000 |
| 83 | சலவையகங்கள் | 1000 |
| 84 | வினைல்போர்டுகடைகள் | 1000 |
| 85 | காலணிகடைகள் | 1000 |
| 86 | கைப்பேசிகடைகள் (விற்பனைமற்றும் பழுதுபார்த்தல்) | 1000 |
| 87 | மிதிவிண்டி மற்றும் உதிரிபாகங்கள் விற்பனை | 1000 |
| 88 | புகைப்படம் எடுக்கும் நிலையங்கள் | 1000 |
| 89 | திரைப்படங்கள் எடுக்கும் நிலையங்கள் | 5000 |
| 90 | பதிவு செய்யும் நிலையங்கள் (Recording Theatre) | 1000 |
| 91 | அச்சகங்கள் | 1000 |
| 92 | அனைத்துவகையான அச்தசிடுதல்கள் | 1000 |
| 93 | துணிகளை விற்பனைசெய்தல் (சிறியகடைகள்) | 1000 |
| 94 | துகைகளை விற்பனைசெய்தல் (சிறியகடைகள்) | 1000 |
| 95 | நெல் அவித்தல் | 1000 |
| 96 | மரம் அறுக்கும் ஆலைகள் | 1000 |
| 97 | FCS ஆலைகள் (Farm and commercial storage Manufacturing) | 1000 |
| 98 | அரிசி ஆலைகள் | 2000 |
| 99 | பாக்கெட்டில் போடப்பட்ட கறியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 100 | கோழ இறைச்சியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 101 | ஆட்டு இறைச்சியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 102 | கோழ இறைச்சி / ஆட்டு இறைச்சி சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 |
| 103 | மாட்டு இறைச்சியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 104 | கடல் உணவுகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 105 | அனைத்துவகையான உணவுப்பொருட்களையும் தயார்செய்தல் | 1000 |
| 106 | அனைத்துவகையான பால் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 107 | அனைத்துவகையான உணவுஎண்ணெய்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 108 | அனைத்துவகையான உணவுப்பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 109 | அனைத்துவகையான நாட்டு மருந்துகள் ஒப்பணை மற்றும் மூலிகை பொருட்கள் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |

| | | |
|---|---|---|
| 110 | மருத்துவ ஆய்வகங்கள் | 1000 |
| 111 | அனைத்து வகையான செல்லபிராணிகள் கடைகள் | 1000 |
| 112 | அனைத்து வகையான கால்நடைகள் / பறவைகள் தீவணங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 113 | காபி கொட்டை வறுத்தல் மற்றும் அரைத்தல் | 1000 |
| 114 | காய்கறிகள், பழங்கள் மற்றும் பூக்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 115 | அனைத்து வகையான மளிகை பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 116 | பேக்கரிகள் | 1000 |
| 117 | பழச்சாறுகடைகள் | 1000 |
| 118 | AMF(Assured Minimum Facility) உடன் டீ கடைகள் | 1500 |
| 119 | நீர்வாழ்வான காட்சிசாலை (Aquarium) | 1000 |
| 120 | ஊறவைத்த தானியங்களை அரைத்தல் / மாவுமில் | 1000 |
| 121 | சுற்றுலா மற்றும் பயணங்கள் | 1000 |
| 122 | மண் அள்ளும் இயந்திரங்கள் | 1000 |
| 123 | கட்டிட பொருட்களை வாடகைக்கு எடுத்தல் | 1000 |
| 124 | சிறு மளிகை | 1000 |
| 125 | சைக்கிள் வாடகைக்கு | 1000 |
| 126 | 5 பசு அல்லது எருமை மாடுகள் வைத்து பால் வியாபாரம் | 1000 |
| 127 | ரோடு மாஜினில் காய்கறி, பழம் வைத்து விற்பனை செய்ய | 1000 |
| 128 | ஹோம் மேட் சாக்லெட் தயாரித்தல் | 2500 |
| 129 | ஹோம் மேல் சாக்லேட் விற்பனை செய்தல் | 2000 |
| 130 | ஹோம் மேட் சாக்லெட் மொத்த விற்பனை | 4000 |
| 131 | உணவிற்க பயன்படுத்தப்படும் வாசனைப் பொருட்கள் சேமிப்பு விற்பனை | 1000 |
| 132 | மிட்டாய்,பிஸ்கட் மொத்த விற்பனை | 3000 |
| 133 | பெட்ரோல் பங்க் | 2500 |
| 134 | சாலை ஓரங்களில் பண்டிகை கால கரும்பு விற்பனை | 750 |
| 135 | சாலை ஓரங்களில் இளநீர், நொங்கு மக்காச் சோளம் விற்பனை | 1000 |
| 136 | கம்பளி,ஸ்வெட்டர் விற்பனை பெரிய கடை | 2000 |
| 137 | கம்பளி ஸ்வெட்டர் விற்பனை சிறிய கடை | 1000 |

| | | |
|---|---|---|
| 138 | குழந்தைகள் விளையாட்டு பொருட்கள் விற்பனை பெரிய கடை | 1000 |
| 139 | குழந்தைகள் விளையாட்டு பொருட்கள் விற்பனை சிறிய கடை | 750 |
| 140 | இரவு நேர பாஸ்ட்புட் கடை | 1000 |
| 141 | மதுபான பார்கள் | 5000 |
| 142 | டாஸ்மாக் கடைகள் (மதுபான விற்பனை நிலையம்) | 3000 |
| 143 | படகு இல்லம் | 5000 |
| 144 | தடுப்பு சுவர்கள் அல்லது அறைகள் இல்லாத ஸ்பாஸ் | 5000 |
| 145 | 147 மீசியம்(வின்டேஜ்.வேக்ஸ் மற்றும் இதர | 1000 |
| 146 | பலூன் சுடுதல் | 2500 |
| 147 | கறி வெட்டுபவர் ஆடு, மாடு,கோழி வதை செய்பவர் (Butcher) | 750 |
| 148 | தேநீர் கடை | 750 |
| 149 | மீன் கடை சிறிய கடை | 750 |
| 150 | மீன் கடை பெரிய கடை | 1500 |
| 151 | பானி பூரி | 1000 |
| 146 | ஹோம் ஸ்டே (தங்கும் விடுதி) 1முதல் 5வரை உள்ள அறைகள் | 3000 |
| 147 | நடை பாதை கடைகள் | 1000 |
| 148 | தள்ளுவண்டி உணவகங்கள் | 1000 |
| 149 | அனைத்து வகையான இருப்பு மற்றும் விற்பனை | 5000 |
| 150 | குளிர்பானங்கள் மற்றும் ஐஸ்கீரிம் | 2500 |
| 151 | லாரி & பஸ் புக்கிங் அலுவலகம் | 750 |
| 152 | தைலம் தயாரிக்கும் இடங்கள் | 1000 |
| 153 | இதர வகைகள் இருப்பு மற்றும் விற்பனை | 1000 |

மேற்குறிப்பிட்ட பட்டியல் தவிர இதர இனங்கள் இருப்பின் அவ்வினங்களுக்கென கட்டணங்கள் ஆணையாளரால் நிர்ணயம் செய்யப்படுவதாகும்.

அட்டவணை III

[See rules 289 (1), (2) and (7))

1 பொருந்தும் தன்மை:-இந்த அட்டவணை.-

1) தெளிவாக வரையறுக்கப்பட்ட சமயலறை மற்றும் இருக்கைக் கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள், சிற்றுண்டிச் சாலை அல்லது உணவகங்கள்.

(2) 1939ம் ஆண்டு தமிழ்நாடு பொதுச்சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறான, வாராந்திர. மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற, தங்கும் இடங்கள், தங்கும் விடுதிகள், சத்திரம், மாளிகை, விருந்தினர் இல்லம், தொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும்

(3) திருமண மண்டபங்கள், விருந்து மண்டபங்கள், அல்லது பொதுக்கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக

பயன்படுத்தப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக்சகூட்டங்களாகப் பயன்படுதப்படுகிற அனைத்து பொதுக்கூட்டங்களுக்கம் பொருந்தும்.

2) உரிம கட்டணம் (ஒரு வருடத்திற்கான கட்டணம்):

(i) தெளிவாக வரையறுக்கப்பட்ட சமையலறை மற்றும் இருக்கைக் கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள், சிற்றுண்டிச் சாலை அல்லது உணவகங்கள். விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்தபட்சம் ரூ.1000/அதிகப்பட்ச கட்டணம் ரூ.15000/- (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| தொழில் விபரம் | 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும்கட்டணம் ரூபாயில் |
|---|---|
| (1) | (2) |
| சமையலறை மற்றும் இருக்கைக் கூடங்களுடன் கூடிய ணவுக் கூடங்கள், சிற்றுண்டிச் சாலை அல்லது உணவகங்கள் | சிற்றுண்டிச்சாலைக்கு 1000- உணவகம் 2000/ உணவுக்கூடங்களுக்கு - 3000/ |

(ii) 2014-ம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டவை தவிர உள்ள விடுதிகள். விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்தபட்சம் ரூ.1500/- அதிகப்பட்ச கட்டணம் ரூ.3500/- (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| தொழில் விபரம் | 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும்கட்டணம் ரூபாயில் |
|---|---|
| (1) | (2) |
| 2014ம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டவை தவிர உள்ள விடுதிகள். | 10 அறைகளுக்குள் 1500/ 10 க்கு மேல் 2500 |

(iii) 1939-ம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறான வாதாந்திர, மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற, தங்கும் இடங்கள், சத்திரம், மாளிகை, விருந்தினர் இல்லம், தொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள் விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்தபட்சம் ரூ.3000/- அதிகப்பட்ச கட்டணம்-ரூ.30000/- (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| தொழில் விபரம் | 01012024 முதல் நிர்ணயம் செய்யப்படும்கட்டணம் ரூபாயில் |
|---|---|
| (1) | (2) |
| 1939 ஆண்டு தமிழ்நாடு பொதுச் சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறான வாதாந்திர, மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற, தங்கும் இடங்கள், சத்திரம் மாளிகை விருந்தினர் இல்லம், தொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள் | 10 அறைகளுக்குள் 3000/- 25 அறைகளுக்குள் 5000/ 25 அறைகளுக்கு மேல் 100004 |

(iv) திருமண மண்டபங்கள், விருந்து மண்டபங்கள் அல்லது பொதுக் கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுதத்ப்படும் அத்தகையமற்ற பிற பொதுக் கட்டடங்கள்

விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்தபட்சம் ரூ.3000/- அதிகப்பட்ச கட்டணம்-ரூ.30000/-(ஒரு வருடத்திற்கான கட்டணம்):

| தொழில் விபரம் | 01012024 முதல் நிர்ணயம் செய்யப்படும்கட்டணம் ரூபாயில் |
|---|---|
| (1) | (2) |
| விருந்து மண்டபங்கள் அல்லது பொதுக் கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுத்தப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக் கட்டடங்கள் | சிறிய அளவிளான மண்டபங்கள் 3,000 முதல் 5,000 வரை பெரிய அளவிலான மண்டபங்கள் 4,000 முதல் 10,000 வரை |

அலுவலகக் குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ள உரிமக் கட்டண விபரங்களை மன்றம் பரிசீலித்து நிர்ணயம் செய்யலாம்.

3. மேற்படி உரிமக் கட்டணங்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் உத்தரவுகளுக்கு உட்பட்டது.

**ந.க.எண்:1315/2024/எச்1**

**தீர்மான எண்.750, அ.கு :-1,2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்/—)லோ.பத்மாவதி
நகர்மன்றத்தலைவர்
கூடலூர் நகராட்சி